# தமிழினத் தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழா

12 - ஆம் பக்கத் தொடர்ச்சி

ஏற்பாடுகள் செய்ய வேண்டும். சுற்றுச்சூழல் தொடர்பான விழிப்புணர்வு குறிப்புகள் அடங்கிய துண்டுப் பிரசுரங்கள் கலைஞர் நூற்றாண்டு விழா சுற்றுச்சூழல் விழிப்புணர்வு என்ற பெயரில் மக்களுக்கு வழங்கிட வேண்டும்.

## கழகம் பேணும் நெசவாளர் நலன்

**பொறுப்பு அணி : நெசவாளர் அணி**

- 5 மண்டலத்திலும் நெசவாளர்களின் கை வண்ணத்தில் நெசவு செய்த பொருட்களை வைத்து "நெசவாளர் விற்பனை மற்றும் வர்த்தக கண்காட்சி" யை நவம்பர் மாதத்தில் நடத்த ஏற்பாடு செய்ய வேண்டும்.
- கண்காட்சி நடத்தப்படும் இடம் மற்றும் தேதியினை தேர்வு செய்து தலைமைக் கழகத்திற்கு தெரியப்படுத்த வேண்டும்.
- கண்காட்சி நடைபெறும் இடங்களில் தலைவர் கலைஞர் அவர்கள் நெசவுத்தொழில் வளர்ச்சிக்காக செய்த நலத் திட்டங்களை விளக்கும் படங்கள் வைக்கப்பட்டு கழக அரசின் நெசவாளர் களுக்கான எதிர்கால திட்டங்கள்(ஜவுளி நகரங்கள், ஜவுளி பூங்காக்கள் போன்றவைகள்) குறித்த காணொளி படங்கள் காட்சிப்படுத்தப்பட வேண்டும்.
- கண்காட்சியில் கலந்துகொள்பவர்கள் பிளாஸ்டிக்கை தவிர்த்து சுற்றுச்சூழலுக்கு உகந்த துணிப் பைகளை பயன்படுத்துவதை ஊக்குவிக்கும் விதமாகவும், "மீண்டும் மஞ்சப்பை" திட்டத்திற்கு வலுசேர்க்கும் விதமாகவும் நெசவு செய்யப்பட்ட கலைஞர் நூற்றாண்டு இலட்சினை பொறித்த பைகளையும் வழங்கிட வேண்டும்.
- நெசவு தொழில் அதிகமாக நடைபெறும் மாவட்டங்களில் தலா ஒரு இடம் என தேர்வு செய்து நவீன நெசவு தொழில்நுட்பங்கள், கழிவு களை கையாளுதல் மற்றும் சந்தைப்படுத்துதல் குறித்து விழிப் புணர்வு முகாம்களை டிசம்பர் மாதத்தில் நடத்திட வேண்டும்.
- விழிப்புணர்வு முகாம்கள் நடைபெறும் பகுதிகளில் "தமிழக நெசவு தொழில் வளர்ச்சியில் கழக அரசின் பங்கு" எனும் தலைப்பில் கழகச் சொற்பொழிவாளர்களை கொண்டு கருத்தரங் கங்களை நடத்திட வேண்டும்.
- விழிப்புணர்வு முகாம் மற்றும் கருத்தரங்கம் குறித்த விளம்பரங் களை நிகழ்விற்கு ஒரு வாரத்திற்கு முன்னதாகவே சுவ ரொட்டிகள், பதாகைகள், செய்தி தாள், தொலைக்காட்சி அறிவிப்புகள் மற்றும் சமூக வலைதளங்களின் மூலமாக செய்திட வேண்டும்.
- நிகழ்ச்சியின் போது நலிந்த நெசவாளர்களுக்கு தேவையான நலத்திட்ட உதவிகளை வழங்கிடவேண்டும்.

## மீனவர் நலனில் கழகம் நிகழ்ச்சிகள்

**பொறுப்பு அணி : மீனவர் அணி**

- கழக மீனவர் அணியின் சார்பில் மீனவர்களுக்கு அரசு வழங்கும் நலத்திட்டங்கள்,விபத்துக் காப்பீடு, தடைக்கால நிவாரணம், இறப்புச் சான்றிதழ் பெறுதல் போன்றவைகளைப் பெற ஏதுவாக மீன்வளத் துறை அதிகாரிகளைக் கொண்டு கடலோர மாவட்டங்க ளில் உள்ள கழக அமைப்புகளில் குறை தீர்ப்பு முகாம்களை ஏற்பாடு செய்திட வேண்டும்.
- மீனவர்கள் அதிகம் வசிக்கும் பகுதிகளில் மீன் வியாபாரிகளுக்கு கலைஞர் நூற்றாண்டு இலட்சினை பதிக்கப்பட்ட ஐஸ் பெட்டிகள், நிழற்குடைகள் மற்றும் மீன் வெட்டுபவர்களுக்கு தேவைப்படும் உபகரணங்கள், உயிரிழந்த மீனவர்களின் குழந்தைகளுக்கு கல்வி உதவி போன்ற நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சியாக நடத்திட வேண்டும்.
- நிகழ்ச்சிக்கு கழகச் சொற்பொழிவாளர்களை அழைத்து "மீனவர் நலனில் கழகம்" என்னும் தலைப்பில் கழக அரசு மீனவர்களுக்கு செய்த சாதனைகளை விளக்கிட வேண்டும்.
- மேலும் நிகழ்ச்சியின்போது கழக அரசின் மீனவர்களுக்கான தொலைநோக்குத் திட்டங்கள் மற்றும் மீன்பிடித் துறைமுகங்கள் நவீனமயமாக்கல் போன்றவை குறித்த காட்சிப்படங்களை திரையிட வேண்டும்.
- தமிழகத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட 3 முக்கிய கடலோரப் பகுதிகளில் நவீன மீன்பிடித் தொழில்நுட்பங்கள், உபகரணங்கள், பாதுகாப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள், சர்வதேச கடல்சார் சட்டங்கள் போன்றவை குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் "Fisheries Expo" க்களை நடத்திட வேண்டும்.

## மக்களிடம் முத்தமிழறிஞரின் சமூகநீதி மற்றும் மதச்சார்பின்மை கோட்பாடுகளைக் கொண்டு சேர்த்தல்

**பொறுப்பு அணி : ஆதிதிராவிடர் நலக்குழு மற்றும் சிறுபான்மையினர் நலஉரிமைப்பிரிவு**

- அனைத்து கழக மாவட்டங்களிலும் "முத்தமிழறிஞரின் சமூகநீதி மற்றும் மதச்சார்பின்மை கோட்பாடுகள்" எனும் தலைப்பில் நிகழ்ச்சிகளை ஆகஸ்ட் மாதம் கடைசி வாரத்திற்குள் நடத்திட வேண்டும்.
- நிகழ்ச்சியில் உள்ளூர் இசுலாமிய, கிருஸ்தவ மத போதகர்களைக் கொண்டு தலைவர் கலைஞர் அவர்களின் சாதனைகளை விளக்குவதன் மூலமாக கழகத்தின் சமூகநீதி, மதச்சார்பின்மை கொள்கைகளை மக்களிடம் ஆழமாகக் கொண்டு சேர்க்குமாறு நிகழ்ச்சியினை அமைத்திடல் வேண்டும்.
- நிகழ்ச்சியின் போது தமிழக வரலாற்றில் சமூகநீதி, மதச்சார் பின்மை ஆகிய கொள்கைகளை நிலைநிறுத்தும் விதமான முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நடவடிக்கைகள் குறித்து விளக்கும் ஆவணப்படங்களைத் திரையிட வேண்டும்.
- 5 மண்டலங்களிலும் தலா ஒரு இடத்தில் அனைவரும் வேறு பாடின்றி நாடும் அறிவுப்பசி மற்றும் வயிற்றுப்பசி ஆகிய இரண்டையும் ஆற்றும் வகையில் கல்வியாளர்களைக் கொண்டு "தலைவர் கலைஞர் அவர்களின் சமய சார்பற்ற சமூகநீதி செயல்பாடுகள்" எனும் தலைப்பில் கருத்தரங்கமும் அதனைத் தொடர்ந்து சமபந்தி விருந்தும் ஏற்பாடு செய்ய வேண்டும்.
- இதற்கான இடம், தேதி போன்றவற்றை இறுதி செய்து தலைமைக் கழகத்திற்கு தெரியப்படுத்தவேண்டும். மேலும் இந்நிகழ்வு குறித்து ஒரு வாரத்திற்கு முன்னதாகவே சுவரொட்டிகள், பதாகைகள், உள்ளூர் தொலைக்காட்சிகள் மற்றும் சமூக வலை தளங்களில் விளம்பரம் செய்யவேண்டும்.

## விவசாயக் கண்காட்சி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்

**பொறுப்பு அணி : விவசாய மற்றும் விவசாயத் தொழிலாளர் அணி**

- விவசாய அணியின் சார்பாக அனைத்துக் கழக ஒன்றியத்திலும் நவீன தொழில்நுட்பங்கள், விவசாயத் திட்டங்கள் மற்றும் கூட்டுறவு வங்கியின் பயிர்க் கடன்கள் குறித்த விழிப்புணர்வு முகாம் வேளாண்மை அதிகாரிகளைக் கொண்டு ஆகஸ்ட் மாதத்தில் நடத்தப்பட வேண்டும்.
- விழிப்புணர்வு முகாம் குறித்த விளம்பரங்கள் ஒரு வாரத்திற்கு முன்னதாகவே ஒலிப்பெருக்கி அறிவிப்பு, செய்தித்தாள் விளம்ப ரங்கள் மற்றும் சுவரொட்டிகள் மூலமாக செய்யப்படவேண்டும்.
- முகாம்களில் பங்குபெறும் விவசாயிகள் பயன்பெறும் வகையில் மரக்கன்றுகள் மற்றும் விதைப்பந்து பைகளுடன் தலைவர் கலைஞர் அவர்கள் விவசாயிகளுக்கு செய்த பல தொலைநோக்குத் திட்டங்கள் குறித்த துண்டுப் பிரசுரங்களை வழங்கிட வேண்டும்.
- மாவட்டத்திற்கு ஒரு இடத்தில் என பல்வேறு விவசாய முறைகள், அதன் மகசூல் குறித்த மற்றும் தலைவர் கலைஞர் அவர்களின் விவசாயத்திற்கான முன்னோடித் திட்டங்கள் பற்றிய விளக்கங் களின் தொகுப்புகள் அடங்கிய விவசாயக் கண்காட்சி நிகழ்ச்சி செப்டம்பர் மாதத்தில் நடத்தப்பட வேண்டும்.
- கண்காட்சி நடைபெறும் இடம் மற்றும் நடைபெறும் நாட்கள் குறித்த பட்டியலை இறுதி செய்து தலைமைக் கழகத்திற்கு ஆகஸ்ட் மாதம் இறுதி வாரத்திற்குள் அனுப்பி வைக்க வேண்டும்.
- அனைத்து உழவர் சந்தைகளிலும் தேவைப்படும் கூடுதல் வசதிகளை விவசாய அணியின் சார்பாக செய்துதரும் வகையில் முக்கியக் கழக நிர்வாகிகளைக் கொண்டு நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்து நடத்த வேண்டும்.
- விவசாயிகளுக்காக 'நான் விவசாயி' என்ற செயலியை உருவாக்கி, அதில் விவசாயத் திட்டங்கள், காலநிலை குறித்த அறிவிப்புகள் மற்றும் சந்தைகளின் விலை நிலவரங்கள் குறித்த அறிவிப்புகள் ஆகியவை இடம் பெறும் வகையில் அமைக்கப்பட வேண்டும். இந்த செயலியானது முதலமைச்சர் மற்றும் விவசாய நலத்துறை அமைச்சர் ஆகியோர் மூலமாக துவக்கிவைக்கப்பட வேண்டும்.

## தொழிற் சங்கத்தின் சார்பில் நிகழ்ச்சிகள்

**பொறுப்பு அணி : அமைப்பு சாரா ஓட்டுநர் மற்றும் தொழிலாளர் அணி**

- அனைத்து நகரம், பேரூர், ஒன்றியம் மற்றும் மாநகரங்களில் உள்ள அனைத்து நிறுத்தங்களிலும் அமைப்பு சாரா ஓட்டுநர் அணியின் பெயர் பலகை நிறுவவேண்டும்.
- அனைத்து நிறுத்தங்களிலும் தலைவர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படம் நிறுவி மலர் தூவுதல், துண்டுப் பிரசுரங்கள் அளிப்பது மற்றும் இனிப்பு வழங்குதல் போன்ற நிகழ்ச்சிகள் மாதம் இருமுறை ஆகஸ்ட் முதல் ஜூன் 2024 வரை நடத்தப்பட வேண்டும்.
- தொ.மு.ச. சார்பில் அனைத்துப் பணிமனைகள் மற்றும் பேருந்து நிலையங்களில் தலைவர் கலைஞர் அவர்களின் சாதனைகள் அடங்கிய துண்டுப் பிரசுரங்கள் அளிப்பது, மேடைப் பேச்சுகள் மற்றும் கொடியேற்றுதல் போன்ற நிகழ்ச்சிகள் நடத்த வேண்டும்.
- முக்கியப் பேருந்து நிறுத்தங்களில் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை போற்றும் வகையில் ஏப்ரல், மே மாதங்களில் தண்ணீர்ப் பந்தல் அமைத்து தரவேண்டும்.

## எழுத்தாளர் அரங்கம்

**பொறுப்பு : எழுத்தாளர் இமயம்**

- முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் சிறப்புகளை மக்களிடம் எடுத்துரைக்கும் வகையில் எழுத்தாளர்கள் பங்கேற்கும் எழுத்தாளர்கள் அரங்கம் நிகழ்ச்சி ஏற்பாடு செய்ய வேண்டும்.
- முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் எழுத்தாளராக ஆற்றிய அனைத்துச் சிறப்புகளையும் பற்றி எழுத்தாளர்கள் தங்களது அனுபவங்களையும் அவரது சிறப்புகளையும் எடுத்து விளக்கும் வகையில் நிகழ்ச்சியானது அமைந்திட வேண்டும்.

## தலைவர் கலைஞர் அவர்களை நினைவூட்டும் நிகழ்ச்சிகள்

**பொறுப்பு : மாவட்டக் கழகம்**

- தலைவர் கலைஞர் அவர்களின் சாதனைகளை மாவட்டச் செயலாளர்கள் தங்கள் மாவட்டத்தில் தலைவர் கலைஞர் அவர்கள் உருவாக்கிய பள்ளிக்கூடங்கள், கல்லூரிகள், பேருந்து நிலை யங்கள் மற்றும் சமத்துவபுரங்கள் ஆகியவற்றை நினைவுப் படுத்தும் வகையில் ஆகஸ்ட் 2023 முதல் ஜூன் 2024 வரை, வாரத்திற்கு இரு நிகழ்ச்சிகளை நடத்திட வேண்டும்.
- நலத்திட்டங்களில் பயனடைந்த நபர்களை சிறப்பு விருந்தினர் களாக அழைத்து தலைவர் கலைஞர் அவர்களால் அடைந்த பலன்களை விளக்கும் வகையில் நிகழ்ச்சிகளை நடத்திட வேண்டும்.
- தலைவர் அவர்களின் ஆட்சிக்காலத்தில் தங்கள் மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்ட நலத்திட்டங்கள் குறித்த பட்டியலை ஒலிப்பெருக்கியில் ஒலிநாடாக்களாகவும், துண்டுப் பிரசுரங் களாகவும் மக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டும்.

## கூட்டணிக் கட்சி சொற்பொழிவாளர்களைக் கொண்டு கருத்தரங்கம்

**பொறுப்பு : மாவட்டக் கழகம்**

- மாவட்டச் செயலாளர்களின் பரிந்துரையில் ஒவ்வொரு வருவாய் மாவட்டத் தலைநகரங்களிலும் கருத்தரங்க நிகழ்ச்சிகள் நடத்தப்பட வேண்டும்.
- நிகழ்ச்சி நடத்துவதற்கான இடங்கள், தலைப்புகள், சொற்பொழி வாளர்கள் போன்றவற்றை தேர்வு செய்து அந்தப் பட்டியலை ஆகஸ்ட் மாதத்திற்குள் தலைமைக் கழகத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும்.
- நிகழ்ச்சிக்கு அனைத்துக் கூட்டணிக் கட்சி நிர்வாகிகளுக்கும் அழைப்பு விடுக்க வேண்டும்.
- நிகழ்ச்சி குறித்து சமூக வலை தளங்களில் விளம்பரம் செய்ய வேண்டும். மேலும் பொது இடங்களில் விளம்பரப் பதாகைகளை ஒரு வாரத்திற்கு முன்னதாகவே வைக்க வேண்டும்.
- நிகழ்ச்சிகளை அந்தந்த மாவட்டங்களில் உள்ள உள்ளூர் தொலைக் காட்சிகள் மற்றும் youtube, Facebook, instagram போன்ற சமூக வலைத்தளங்களிலும் நேரலை ஒளிபரப்பு செய்ய வேண்டும்.

## கலைஞர் வரலாற்றுக் குறிப்புகள் அடங்கிய நூல் வெளியீடு

**பொறுப்பு : தலைமைக் கழகம்**

- முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் வரலாற்றுக் குறிப்புகள் மற்றும் அரிய புகைப் படங்கள் அடங்கிய தொகுப்பினை முப்பெரும் விழாவிற்கு முன்பாக தொகுத்து நூலாக்க வேண்டும்.
- முப்பெரும் விழா அன்று, திராவிட அறிஞர்கள், தமிழறிஞர்கள், வரலாற்று ஆய்வாளர்கள் முன்னிலையில் கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இந்நூலை வெளியிட வேண்டும்.
- மக்கள் எளிதில் படிப்பதற்கு ஏதுவாக இந்நூலின் பிரதிகளை அனைத்து அரசு நூலகங்களிலும் கொண்டு சேர்க்க வேண்டும்.
- மேலும் வெகு மக்களை குறிப்பாக மாணவர்களைச் சென்றடையும் விதமாக இதன் மின்னணு வடிவம் மற்றும் ஒலிப் புத்தகத்தினை வலைதளங்களில் இலவசமாக கிடைக்க வழிவகை செய்ய வேண்டும்.

## ஊர்கள் தோறும் தி.மு.க.

**பொறுப்பு : மாவட்டக் கழகம்**

- மாவட்டச் செயலாளர்கள் மூலம் அனைத்துக் கழக அமைப்பு களிலும் கொடிக்கம்பம் நிறுவுவதற்கான அறிக்கை விடுக்க வேண்டும்.
- அனைத்துக் கழக அமைப்புகளிலும் ஆகஸ்ட் 2023 முதல் ஜூன் 2024 வரை ஒவ்வொரு வார இறுதியிலும் மக்கள் நெருக்கம் அதிகம் உள்ள இடங்களில் நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்து நடத்தப்பட வேண்டும்.
- ஒவ்வொரு கழக மாவட்டத்திலும் தேர்ந்தெடுக்கப்பட்ட 100 புதிய இடங்களில் கொடிகம்பங்கள் நிறுவப்படுவதை உறுதிச் செய்ய வேண்டும்.
- மாவட்டம் தோறும் ஒன்றியங்களில் உள்ள அனைத்துக் கிராமங்களிலும் கழக முன்னோடிகள் அல்லது முக்கிய கழக நிர்வாகிகளை அழைத்து கழகக் கொடியினை ஏற்ற வேண்டும்.
- நிகழ்வின்போது கலந்து கொள்ளும் மக்களுக்கு இனிப்புகளும், கழக சாதனைப் பட்டியல் அடங்கிய துண்டுப் பிரசுரங்கள் வழங்கப்பட வேண்டும்.
- அனைத்து இடங்களிலும் கொடியேற்றப்படும் நிகழ்ச்சிகளை 'ஊர்கள்தோறும் தி.மு.க.' என்ற Hashtagல் சமூக வலை தளங் களில், அப்பகுதியைச் சார்ந்த தகவல் தொழில்நுட்ப அணியினர் மற்றும் கழக நிர்வாகிகளை கொண்டு பதிவிட வேண்டும்.

## எங்கெங்கும் கலைஞர்

**பொறுப்பு : மாவட்டக் கழகம்**

- மாவட்டச் செயலாளர்கள் மூலம் சட்டமன்றத் தொகுதி வாரியாக கலைஞர் சிலை நிறுவுவதற்கான ஆலோசனைக் கூட்டம் நடத்தி 234 சிலைகள் வைப்பதற்கான இடங்களையும், தேதியையும் உறுதி செய்து செப்டம்பர் மாதத்திற்குள் தலைமைக் கழகத்திற்கு அனுப்பவேண்டும்.
- தொகுதியில் உள்ள பாராளுமன்ற உறுப்பினர், சட்டமன்ற உறுப்பினர், கழக முன்னோடிகள், கழக உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் முன்னிலையில் அமைச்சர் அல்லது பொறுப்பு அமைச்சர் மூலம் சிலை திறப்பு நிகழ்ச்சிகள் நவம்பர் மாதத்தில் நடத்தப்பட வேண்டும்.
- நிகழ்ச்சியின் போது கலந்து கொள்ளும் மக்களுக்கு இனிப்புகள் மற்றும் "கலைஞர் 100" என்ற தலைப்பில் சாதனை விளக்க துண்டுப் பிரசுரங்கள் வழங்கப்பட வேண்டும்.
- சிலை திறப்பு நிகழ்வினை hashtag (எங்கெங்கும் கலைஞர்) செய்து சமூக வலைதளங்களில் தகவல் தொழில்நுட்ப நிர்வாகிகள் மற்றும் கழக நிர்வாகிகள் பதிவிட வேண்டும்.

## கழகமே குடும்பம்

**பொறுப்பு : மாவட்டக் கழகம்**

- ஒவ்வொரு கழக மாவட்டத்திலும் தலா 100 கழக முன்னோடிகளின் பட்டியல் மற்றும் நிகழ்ச்சிக்கான அட்டவணை ஆகியவற்றை தயார் செய்து செப்டம்பர் முதல் வாரத்திற்குள் தலைமைக் கழகத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும்.
- பட்டியலிடப்பட்ட அனைத்துக் கழக முன்னோடிகளுக்கும் அமைச்சர்கள்/பொறுப்பு அமைச்சர்கள் செப்டம்பர் இரண்டாம் வாரத்தில் பொற்கிழி வழங்கும் வகையில் கழக மாவட்ட வாரியாக நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்யவேண்டும்.
- சமீப காலங்களில் மறைந்த கழக உறுப்பினர்களின் குடும்பத்தின ருக்கு உதவித்தொகை மற்றும் குழந்தைகளுக்கு (கல்வி) உதவிகள் போன்றவற்றை வழங்க வேண்டும்.

## மாவட்டத் தலைநகரங்களில் புகைப்படக் கண்காட்சி

**பொறுப்பு : மாவட்ட பொறுப்பு அமைச்சர்கள் மற்றும் மாவட்டச் செயலாளர்கள்**

- மாவட்டந்தோறும் உள்ள கழக நிர்வாகிகளுடன், புகைப்பட கண்காட்சி குறித்த ஆலோசனைக் கூட்டம் நடத்தப்பட வேண்டும்.
- கண்காட்சியில் கழக ஆட்சியின் சாதனைகள், போராட்டங்கள், வாழ்க்கை வரலாறு போன்றவற்றை விளக்கும் புகைப்படங்கள் மற்றும் கண்காட்சி நடைபெறும் இடத்தை உறுதி செய்து தலைமைக் கழகத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும்.
- மாவட்டத்தில் உள்ள அனைத்து மாநகரங்கள், நகரங்கள், பேரூர்கள் மற்றும் ஒன்றியங்களில் புகைப்பட கண்காட்சியை குறித்து, சமூக வலைதளங்கள் மற்றும் உள்ளூர் தொலைக்காட்சி கள் மூலமாக ஒரு வாரத்திற்கு முன்னதாகவே விளம்பரம் செய்ய வேண்டும்.
- மாதம் முழுவதும் பொதுமக்கள் அனைவரும் கண்டு மகிழும் வண்ணம் ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும்.
- கண்காட்சிக்கு வரும் மக்களுக்கு தி.மு.க. அரசின் சாதனை விளக்கப் பிரசுரங்களை வழங்க வேண்டும்.
- கண்காட்சியில் பொதுமக்களுக்கு "Selfie With கலைஞர்" statue வைக்கவேண்டும். இந்த Statue உடன் எடுக்கும் புகைப்படத்தினை selfiewith கலைஞர் என்ற Hashtag மூலம் சமூக வலை தளங்களில் பதிவிடும் பொதுமக்களில் சிறந்த Selfie With கலைஞர் புகைப்படங்களுக்கு பரிசுகள் வழங்கப்பட வேண்டும்.

---

**அண்ணா அறிவாலயம்**
சென்னை 600 018
08.08.2023

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**